HE

## HTV - Advance Module

# பாதுகாப்பாக வாகனம் ஓட்டுதல்

சாலையில் வாகனம் ஓட்டுதலுக்கான அடிப்படை செயல்முறை மற்றும் விதிமுறைகள்



# নিরাপদে গাড়ি চালানো

গাড়ি চালানোর প্রাথমিক নির্দেশিকা এবং পথ-আইন

ভারতের ক্রম-বর্ধমান উন্নয়নের সাথে সাথে বিভিন্ন রকমের সমস্যারও বৃদ্ধি ঘটছে। পথে যানবাহনের সংখ্যা বেড়ে যাওয়া, মোবাইল ফোনে কথা বলায় ব্যস্ত থাকা, গাড়ি চালানো'র সময় মদ্যপান, ধূমপান এসব কিছুর কারণেই জীবন এবং অন্যান্য জিনিসের অপূরনীয় ক্ষতি হচ্ছে।

বেপরোয়া গাড়ি চালানো'র জন্য হতাহতের ঘটনার সংবাদ চারদিক থেকে আসছে। আমাদের সতর্ক হতে হবে এবং এই পরিসংখ্যানে যাতে নিজেরাও নথিভুক্ত না হই, সে চেষ্টা করতে হবে।

এক শিক্ষিত এবং সাবধানী চালকের সংস্কৃতি গড়ে তুলতে হবে, যারা অন্যান্য পথ ব্যবহারকারীদের প্রতি সংবেদনশীল হবে, আইন মেনে চলবে, এবং পথের দায়িত্ববোধ মেনে চলবে, একমাত্র এভাবেই প্রতিদিনের পথ-দুর্ঘটনায় অহেতুক মৃত্যু এবং ক্ষতির পরিমান হ্রাস করা সম্ভব। আমাদের প্রত্যেককে দায়িত্বশীল হতে হবে, এবং আমরা সবাই সম্মিলিতভাবে চেষ্টা করলে আমাদের রাস্তার এবং রাস্তা ব্যবহার করেন যাঁরা , তাঁদেরও স্বভাব পরিবর্তন করতে পারব।

Published by

**Hubert Ebner (India) Pvt. Ltd.**
**C-18, Chirag Enclave,**
**New Delhi – 110 048 (India)**
**Tel.: +91 11 46107654**
**E-mail: driving@he-india.com**
**Web: www.he-india.com**
**© All rights reserved**

প্রথম সংস্করণ: May 2010

প্রকাশকের অনুমতি ছাড়া এই প্রকাশনের কোনো অংশ, কোনো প্রকারের ইলেক্ট্রনিক, যান্ত্রিক, ফোটোকপি, রেকর্ডিং অথবা অন্য কোনো মাধ্যমে, পুনর্মুদ্রন, সংরক্ষন বা প্রেরন করা যাবে না। ভাড়ার বিনিময়ে জনসাধারনের ব্যবহারযোগ্য নয়।




## HTV-প্রাথমিক 1-34

**দায়িত্বশীল চালক** **1-10**

চালকের দায়িত্ব 1
প্রয়োজনীয় নথিপত্র 2
মোটর যানের রেজিস্ট্রেশন 3
নির্দিষ্ট সময়ান্তর পরীক্ষা এবং গাড়ির রক্ষনাবেক্ষণ 4
মাল বহন করা এবং পরিবহণ 4
যানবাহন এবং মালের সুরক্ষা 5
যানবাহনের অপব্যবহার 5
সামাজিক দায়দায়িত্ব 6
একজন ভাল চালকের গুণাগুণ 6
স্বাস্থ্য এবং শারীরিক যোগ্যতা 7
জ্ঞান, প্রশিক্ষণ, দক্ষতা এবং অভিজ্ঞতা 11
সহকারী বা হেল্পারের দায়িত্ব 11
ট্রাফিক আইন ভঙ্গ এবং জরিমানা 12

**মালবোঝাই-এর পদ্ধতি** **13-16**

মালের পর্যবেক্ষন 13
মালের নিরাপত্তা 14
মাল পরিবহনের জন্য প্রয়োজনীয় নথিপত্র 14
ট্যাঙ্কার 15
বিপদজনক বস্তু বহন করা 15
ভারী মালবাহী গাড়ী সামলানো 16

**গাড়ীর বিষয়ে জ্ঞান এবং রক্ষণাবেক্ষণ আবশ্যকতা** **17-24**

নিয়মিত পর্যাবেক্ষন 17
যাত্রার মধ্যবর্তী সময়ে 18
যাত্রার শেষে 18
সাপ্তাহিক পরীক্ষা 19
নির্দিষ্ট সময় অন্তর পরীক্ষা 19
ট্রাকের ডিজেল বাঁচান 19
ধোঁয়া নির্গমন 20
ভাল গাড়ি চালানোর বিষয়ে ৬টি সহজ পরামর্শ 24
মনে রাখবেন 24


**খারাপ হয়ে যাওয়া/ দূর্ঘটনা/ গাড়ি টেনে নিয়ে যাওয়া** **25-28**

খারাপ হয়ে যাওয়া 25
দূর্ঘটনা 26
গাড়ি টেনে নিয়ে যাওয়া 27

**প্রাথমিক চিকিৎসা** **29-34**

পথ-দূর্ঘটনায় আহতদের প্রাথমিক চিকিৎসা 29
মাথার আঘাত 29
ঘাড় এবং মেরুদণ্ডের আঘাত 30
বুকে আঘাতের লক্ষণ 31
হাড় ভেঙ্গে যাওয়ার লক্ষণ 31
বাইরের আঘাত বা গভীর ক্ষত, কেটে যাওয়া এবং কালশিটে পড়া 32
পোড়া 33

# বিষয়সূচী




## HTV-1 35-70

**যানের গতি বিজ্ঞান** **37-40**
- মাধ্যাকর্ষন ভর 37
- সক্রিয় গতিশীল শক্তি 37
- গাড়ীর গতিবেগ 37
- যানের পরিকাঠামো 38
- রাস্তার তলের সাথে টায়ারের স্থিতিশীলতা 38
- রাস্তার অবস্থা 38
- রাস্তায় মেরামতি 38
- বাহিত মাল পত্রের ওজন 40
- ব্রেক কষার পদ্ধতি 40

**আত্মরক্ষামূলক ড্রাইভিং** **41-52**
- রক্ষণাত্মকভাবে চালানোর কৌশল 41
- গাড়ী চালিয়ে এড়িয়ে যাওয়া 41
- রাস্তা থেকে সরে যাওয়া 42
- ব্রেক কষা 42
- বাম এবং ডান দিকে গাড়ী ঘোরানো 42
- ওভারটেক করা 43
- উল্টোদিকে গাড়ী চালানো 46
- U-টার্ন 47
- সঠিক পথদিয়ে এগিয়ে যাওয়া 47
- লাইট সিগন্যালবিহীন রাস্তার মোড়ে প্রবেশ করা 50
- লাইট সিগন্যালযুক্ত রাস্তার মোড়ে প্রবেশ করা 50
- গোলমাথার মোড় 50
- গাড়ি দাঁড় করানো (পার্কিং) 51
- থেমে থাকা গাড়ির পাশ দিয়ে যাওয়া 51

**কঠিন পরিস্থিতিতে গাড়ি চালানো** **53-58**
- রাস্তার অবস্থা 53
- প্রতিকূল আবহাওয়ার পরিস্থিতি 55

**আকস্মিক বিপদের ঝুকির প্রস্তুতি** **59-66**
- আকস্মিক বিপদের পর্যবেক্ষন 59
- গাড়ীর গতি কম এবং ব্রেক নিয়ন্ত্রন করা 63
- দৃশ্যমানতা 64

**জরুরী অবস্থা** **67-70**
- টায়ার ফেটে যাওয়া 67
- ব্রেক অচল হওয়া 67
- সংঘর্ষ এড়ানো 68
- গাড়িতে আগুন লাগলে 68
- পিছলে যাওয়া 69
- মালপত্র তোলা বা খালাস 69
- স্টীয়ারিং অচল 69
- প্রপেলার শ্যাফট ইউনিভার্সাল জয়েন্ট অচল 69
- সামনের গাড়ির খুব কাছাকাছি চালানো টেলগেটিং 69
- রিয়ার অ্যাক্সেল অকেজো 70


সেন্টার বোল্ট অবেজো 70
সক্রিয় বৈদ্যুতিক তারের সংস্পর্শে আসা 70
সেতুর ওপরেরে দিকে স্পর্শ এবং নীচ দিয়ে যাওয়া 70




## HTV-2 71-88


**গাড়ীর বিষয়ে তথ্য** **73-68**
সাধারণ বিষয় 73
মোটরযানের বিভিন্ন অংশ 73
ইঞ্জিন 73
যানের ব্যবস্থা 74
ব্রেক কষার পদ্ধতি 76
টায়ার 76
ইলেকট্রনিক্যাল সিস্টেম 77
বৈদ্যুতিক সরঞ্জাম 78
গাড়ীর রক্ষনাবেক্ষণ 79
সমস্যার মোকাবিলা ট্রাব্ল শুটিং 86

# பொறுப்பு வாய்ந்த ஓட்டுனர்




ஒரு கனரக வாகன ஓட்டுனர், தன்னுடைய சொந்தப் பாதுகாப்பு மட்டுமின்றி சில கூடுதல் பொறுப்புகளையும் கொண்டுள்ளார். அவைகள் நிர்வாக, சமூக பொறுப்புகள், வாகனம் மற்றும் அதிலுள்ள பொருட்களின் பாதுகாப்பு பொறுப்புமாகும். அவர் சாலையில் செல்லும்போது, அனைத்து சந்தர்ப்பங்களிலும், சிறந்த ஓட்டுதல் நடைமுறைகளைப் பின்பற்றி ஒரு முன்மாதிரியாக விளங்குவதுடன், பிற சாலை உபயோகிப்பாளர்களையும் கவனத்தில் கொண்டு, அவர்களிடம் நல்லிணக்கத்துடனும், மரியாதையுடனும் நடந்துகொள்ளவேண்டும்.

சாலையில் பாதுகாப்பாக ஓட்டுவதற்கு, சிறந்த ஆரோக்கியமும், நேர்மறையான அணுகுமுறை மற்றும் நடத்தையும் தேவை. அதற்கான உடல்தகுதியுடன் இருப்பது ஓட்டுனரின் பொறுப்பு ஆகும். பாதுகாப்பாக ஓட்டுவதற்கு தேவையான திறன் மற்றும் தகுதியை குறைக்கும் விஷயங்கள் குறித்து அவர்கள் அறிந்து வைத்திருக்கவேண்டும்.

## » ஓட்டுனரின் பொறுப்புகள்

ஒரு ஓட்டுனர் பின்வருபவற்றிற்கு பொறுப்பாவார்:

- அவர் ஓட்டும் வாகன வகை மற்றும் அளவுக்கேற்ற ஓட்டுனர் உரிமத்தை பெற்றிருக்கவேண்டும்.
- வாகனம் பதிவு செய்யப்பட்டிருக்கவேண்டும்.
- வாகனத்தின் தகுதி - ஒரு வாகனத்தை சாலையில் நன்கு ஓடக்கூடிய நிலையில் வைத்திருக்கவேண்டியது அவருடைய கடமையாகும்.
- அனைத்து சந்தர்ப்பங்களிலும் தேவையான ஆவணங்கள், முதலுதவி உபகரணங்கள், எச்சரிக்கை முக்கோணம் மற்றும் அனைத்து உபகரணங்களையும் கொண்டுள்ள டூல் கிட், மாற்று சக்கரம் மற்றும் ஜாக் போன்றவற்றை வைத்திருக்கவேண்டும்.




- பொருட்களையும், பயணிகளையும் பாதுகாப்பாக அழைத்துச் செல்வது ஓட்டுனரின் கடமையாகும். எடுத்துச் செல்லப்படும் பொருட்கள் முறையான பாதுகாப்பில் இருப்பதையும், அளவுக்கு மீறி பொருட்கள் ஏற்றப்படாமலிருப்பதையும் உறுதி செய்யவேண்டியது ஓட்டுனரின் பொறுப்பாகும். அனைத்து சந்தர்ப்பங்கள்
- மற்றும் சூழ்நிலைகளிலும் வாகனத்தை இயக்குவதற்கும், கையாள்வதற்கும் ஏற்ப உடல் தகுதியுடன் இருப்பதுடன், எப்போதும் எச்சரிக்கையாகவும் இருக்கவேண்டும். (களைப்பாக இருக்கக்கூடாது. சோர்வாக இருக்கக்கூடாது. குடித்து விட்டு வாகனம் ஓட்டக்கூடாது. ஓட்டும்போது கவனம் சிதறக்கூடாது.). அனைத்து சந்தர்ப்பங்களிலும் போக்குவரத்து விதிகளை மதித்து, பின்பற்றவும்.
- ஓட்டுனர் முறையான மற்றும் வசதியான இருக்கையைப் பெற்றிருக்கவேண்டும். இது, அவர் வாகனக் கட்டுப்பாடுகள் மற்றும் பெடல்களை வசதியாக, எளிதில் அடையும் விதத்திலும், ஸ்டியரிங் சக்கரத்தை மென்மையாக, தடையின்றி கையாள்வதற்கு தகுந்ததாகவும் இருக்கவேண்டும்.
- அனைத்து சந்தர்ப்பங்களிலும் சீட் பெல்ட்டை பயன்படுத்தவேண்டும்.




- சாலை மற்றும் சாலையில் காணப்படும் வாகனப் போக்குவரத்தை தெளிவாக காண்பதற்கேற்ற, நல்ல பார்வைத் திறனைப் பெற்றிருப்பதை உறுதி செய்துகொள்ளவேண்டும். வின்ட்ஸ்க்ரீனை சுத்தமாக வைத்திருக்கவேண்டும். ஓட்டுவதற்கு உதவும்
- கண்ணாடிகளை முறையாக அட்ஜஸ்ட் செய்து வைத்திருக்கவேண்டும். சுற்றுச்சூழல் மாசுபடாதவாறு வாகனத்தை பயன்படுத்தவேண்டும். திடீரென்று வேகத்தை அதிகரிப்பதோ, சட்டென்று பிரேக் போடவோ கூடாது. நிறுத்துமிடங்களில் எஞ்சினை நிறுத்தாமல், வாகனத்தை நிறுத்தி, மாசு ஏற்படுவதை தவிர்க்கவும். வாகனத்தை மென்மையாக ஓட்டவும்.

# பொறுப்பு வாய்ந்த ஓட்டுனர்

## » தேவைப்படும் ஆவணங்கள்

ஒரு தொழில்முறை ஓட்டுனர், அவர் ஓட்டும் வாகனம் தொடர்பான அனைத்து ஆவணங்கள் குறித்தும் அறிந்து வைத்திருக்கவேண்டியது அவசியமாகும். மேலும் அவர் பயிற்சி பெற்ற ஓட்டுனர் என்பதற்கான சான்றிதழ்களையும் வைத்திருக்கவேண்டும்.

ஓட்டுனர் உரிமம், சாலைவரி மற்றும் பர்மிட்கள் போன்றவற்றை புதுப்பித்து அனைத்து ஆவணங்களையும் அப்டேட் செய்து வைத்திருப்பது ஓட்டுனரின் பொறுப்பு ஆகும். போக்குவரத்து விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் குறித்து முழுமையாக அறிந்து வைத்திருக்கவேண்டும்.




வாகனம் ஓட்டும்போது ஒரு ஓட்டுனர் சட்டப்படி கீழ்கண்ட ஆவணங்களை எடுத்துச்செல்லவேண்டும்:

- ஒரு செல்லத்தக்க ஓட்டுனர் உரிமம்
- வாகன பதிவு சான்றிதழ்
- உரிய சாலை வரி சான்றிதழ்
- பயணிகள் வரி.்.பொருட்கள் வரி செலுத்திய சான்றிதழ்
- சரக்கு வவுச்சர்
- இன்சூரன்ஸ் சான்றிதழ்
- மாசு கட்டுப்பாடு சான்றிதழ்
- அதிகாரமளிப்பு.்.பர்மிட் மற்றும் வாகன தகுதி சான்றிதழ்
- தேவைப்பட்டால் ட்ரம்ப் அட்டை மற்றும் செல்லும் பாதை குறித்த வரைபடம் (இது ஹாஸ்செம் வாகனங்களுக்கு சட்டப்படி கட்டாயமானதாகும்.)

எந்த ஒரு சீருடை அணிந்துள்ள காவல் துறை அதிகாரியும், போக்குவரத்து துறையைச் சேர்ந்த செயலாக்க பணியாளர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவன அலுவலர்களும், எந்த ஒரு சமயத்திலும் ஆவணங்களை பரிசோதிக்கலாம்.

செல்லத்தக்க ஆவணங்களை காண்பிக்கத் தவறினால், அது ஒரு தண்டனைக்குரிய குற்றம் ஆகும். இதற்காக வாகனம் பறிமுதல் செய்யப்படலாம்.

## ஓட்டுனர் உரிமம்

ஒரு செல்லத்தக்க ஓட்டுனர் உரிமமானது, அந்த ஓட்டுனர் கீழ்கண்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வாகனங்களை ஓட்டுவதற்கு உரிமம் பெற்றுள்ளார் என்பதை விளக்கவேண்டும்:

- கியர் இல்லாத மோட்டார் சைக்கிள்
- கியருடன் கூடிய மோட்டார் சைக்கிள்
- மூன்று சக்கர வாகனம்
- சிறு மோட்டார் வாகனம் (தனிநபர்.்.வர்த்தக
- போக்குவரத்து வாகனம் (பொருட்கள்/பயணிகள்
- குறிப்பிட்ட பணிகளுக்கான மோட்டார் வாகனம்)

ஒரு கனரக வாகனத்தை ஓட்டுவதற்கு, ஒருவர், ஒரு செல்லத்தக்க போக்குவரத்து வாகன உரிமத்தை கட்டாயம் பெற்றிருக்கவேண்டும். (HMV / HTV / HPV)




## ஓட்டுனர் உரிமத்தின் செல்லத்தக்க காலம்

உங்களுடைய உரிமம், ஒரு வர்த்தக வாகனத்துக்குரியதாக இருந்தால், அது ஒவ்வொரு 3 ஆண்டுகளுக்கு ஒருமுறையும் புதுப்பிக்கப்படவேண்டும் அல்லது உரிமம் வழங்கும் அமைப்பால் குறிப்பிடப்பட்டுள்ள காலத்துக்கு ஒருமுறை புதுப்பிக்கப்படவேண்டும். இருப்பினும் நீங்கள் ஹேஸ்செம் பொருட்களை கொண்டு செல்வதற்கான அதிகாரத்தைப் பெற்றிருந்தால் அது ஆண்டுதோறும், தேவைப்படும் ஹேஸ்செம் புத்தாக்கப் பயிற்சி பெற்ற பிறகு மேலொப்பம் செய்யப்படவேண்டும்.

## ஓட்டுனர் உரிமத்தைப் புதுப்பித்தல்

உங்கள் உரிமத்தை இறுதி கெடு தேதி முடிந்து, 30 நாட்களுக்குள் கட்டாயம் புதுப்பிக்கவேண்டும். இந்த 30 நாள் அவகாசத்திற்கு பிறகு வாகனத்தை ஓட்டுவது சட்டப்படி குற்றமாகும். ஒரு வர்த்தக உரிமமானது, ஒவ்வொரு 3 ஆண்டுகளுக்குப் பிறகும் புதுப்பிக்கப்படவேண்டும்.

### தேவைகள்

- படிவ எண்.9-ல் காணப்படும் விண்ணப்பம்
- வயது மற்றும் குடியிருப்பு ஆதாரத்திற்கான சான்றிதழ்
- தேவைப்படும் இடங்களில் மருத்துவ சான்றிதழ்
- உங்களுடைய தற்போதைய ஓட்டுனர் உரிமம்
- உங்கள் பாஸ்போர்ட் அளவு புகைப்படத்தின் 3 நகல்கள்
- புத்தாக்கப் பயிற்சி சான்றிதழ்கள்
- உரிய கட்டணம்

## உரிமம் தொலைந்துவிட்டால்

உரிமத்தை தொலைத்துவிட்டால், அது குறித்து உடனடியாக புகார் செய்யவேண்டும். ஒரு டூப்ளிகேட் சான்றிதழ் வாங்குவதற்கு கீழ்கண்ட வழிமுறைகளைப் பின்பற்றவேண்டும்:

- உரிமத்தை தொலைத்தது தொடர்பான அனைத்து தகவல்கள் மற்றும் விபரங்கள் அடங்கிய எழுத்துபூர்வமான புகாரை காவல் நிலையத்தில் அளிக்கவேண்டும்.
- வர்த்தக உரிமமாக இருந்தால், போக்குவரத்து காவல் துறையினரிடமிருந்து சலான் க்ளியரன்ஸ் அறிக்கையை பெறவேண்டும்.
- படிவம் -LLD- ஐ பூர்த்தி செய்யவேண்டும் (உரிமம் தொலைந்தது அல்லது அழிந்தது தொடர்பான தகவல் அளித்தல் மற்றும் டூப்ளிகேட் சான்றிதழ் கோரும் விண்ணப்பம்.)
- தொலைந்து போன உரிமத்தின் நகல்
- வயது மற்றும் குடியிருப்புக்கான ஆதாரச் சான்றிதழ்.
- உரிய கட்டணம்

உங்களுடைய சொந்த நலனுக்காக, உரிமத்தின் நகலை எப்போதும் வைத்திருக்கவும் அல்லது உங்களுக்கு உரிமம் வழங்கிய அமைப்பு, உரிம எண், நாள் ஆகியவை குறித்த விவரங்களை குறித்து வைத்திருக்கவேண்டும்.

## » மோட்டார் வாகனப் பதிவு

### பதிவு எண்கள்

ஒரு வாகனத்தை பதிவு செய்து, பதிவு எண்ணைப் பெறாமல் அதனை ஓட்டக்கூடாது.




பதிவுக் குறியீடு, போக்குவரத்து அமைப்பால் ஒதுக்கீடு செய்யப்படும் எண் ஆகியவை:

- மோட்டார் வாகனத்தின் முன்பக்கம் மற்றும் பின்பக்கத்தில், பரிந்துரைக்கப்பட்ட அளவில், குறிப்பிட்ட
- தூரத்திலிருந்து தெளிவாக தெரியுமாறு காட்சிக்கு வைக்கப்படவேண்டும்.

பதிவு எண்ணை பேன்ஸியான முறையில் குறிப்பிடுவது சட்டவிரோதமாகும்: தண்டனைக்குரியதாகும்.

எண்ணுக்காக 'விண்ணப்பிக்கப்பட்டுள்ளது' என்று தெரிவித்துள்ள வாகனத்தை ஓட்டுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

பதிவு எண் பிளேட்டில், எண்கள் மற்றும் எழுத்துகளின் அளவுகள் மற்றும் நிற அமைப்புகள் ஆகியவை சட்டப்படியான விதிமுறைக-ளின் படியே இருக்கவேண்டும்.

உரிய அமைப்புகளால், உங்கள் மீது குற்ற நடவடிக்கை எடுக்கப்படாமல் இருப்பதற்கு நீங்கள் இந்த வழிகாட்டுதல்களை தவறாமல் பின்பற்றவேண்டியது அவசியமாகும்.

### மாசுக் கட்டுப்பாடு சான்றிதழ்

உங்கள் வாகனமானது, கட்டாயம் ஒரு செல்லத்தக்க மாசுக் கட்டுப்பாடு சான்றிதழைப் பெற்றிருக்கவேண்டும்.



இந்த நடைமுறைகள் மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடும். இந்த புதுப்பித்தலானது 3 மாத காலத்திலிருந்து 6 மாத காலம் வரை வேறுபடும் எனவே ஒரு மாநிலத்தின் விதிமுறைகள் மற்றும் ஒழுங்குமுறைகளை குறித்து அறிந்துகொண்டு அதைப் பின்பற்றவேண்டியது அவசியமானதாகும்.

### வாகன தகுதி சான்றிதழ்

ஒரு பாதுகாப்பான மற்றும் நன்கு பராமரிக்கப்படும் வாகனம் மட்டுமே சாலைகளில் செல்ல அனுமதிக்கப்படுகிறது. ஒரு வாகனம் வாங்கி இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகியிருந்தால், அந்த வாகனம் சாலையில் செல்ல தகுதியுடன் உள்ளது என்பதற்கான தகுதி சோதனைக்கு ஆண்டுதோறும் உட்படுத்தப்படவேண்டும். இது இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட அனைத்து வாகனங்களுக்கும் சட்டப்படி பொருந்தும்.

## » குறிப்பிட்ட காலத்திற்கொரு முறை பரிசோதனை செய்தல் மற்றும் வாகன பராமரிப்பு

சாலையில் செல்வதற்கு தகுதியான வாகனங்கள் மட்டுமே, பயணம் செய்வதற்கு அனுமதிக்கப்படும். இதன் பொருள், அனைத்து மெக்கானிக்கல் மற்றும் எலக்ட்ரிகல் பகுதிகளும் நன்கு பணியாற்றும் நிலையில் இருக்கவேண்டும். தான் ஓட்டும் வாகனம், பாதுகாப்பாக ஓட்டும் நிலையில் உள்ளவாறும், நல்ல நிலையில் உள்ளவாறும் பார்த்துக்கொள்வது ஓட்டுனரின் பொறுப்பாகும். எந்த ஒரு சமயத்திலும் பாதுகாப்பாக ஓட்டுவதற்கு ஏற்றவாறு வாகனம் முறையாக பராமரிக்கப்படவேண்டும்

பாதுகாப்பான முறையில் வாகனத்தை ஓட்டுவதற்கு, ஓட்டுவதற்கு முன்பும், குறிப்பிட்ட காலத்திற்கொரு முறையும் பரிசோதனை செய்துகொள்வது கட்டாயமாகும்.

ஏதேனும் குறைகள் கண்டறியப்பட்டால் அதனை சரிசெய்யாமல் உங்கள் பயணத்தை தொடங்காதீர்கள்

வாகனத்தை ஓட்டிக்கொண்டிருக்கும்போது, இன்ஸ்ட்ருமென்ட் பேனல், கண்ணாடிகள் மற்றும் வாகனத்தின் நிலைமையில் எப்போதும் கவனத்துடன் இருக்கவும். ஏதேனும் எச்சரிக்கை விளக்கு எரிந்தாலோ, பஸ்ஸர்கள் ஒலித்தாலோ, ஏதேனும் வாடை அடைத்தாலோ அல்லது உங்கள் வாகனம் சரியான நிலையில் இல்லை என்பதற்கான அறிகுறிகள் தெரிந்தாலோ அல்லது வரையறுக்கப்பட்ட காரணிகளுக்குள் உங்கள் வாகனம் இயங்காவிட்டாலோ, வாகனத்தை நிறுத்திவிட்டு என்ன பிரச்னை என்று பார்க்கவும்.




பிரச்னை என்ன என்று கண்டறியப்படாவிட்டாலோ அல்லது பிரச்சனையை தீர்க்க முடியாவிட்டாலோ, வாகனம் ஓட்டிச் செல்வதற்கு பாதுகாப்பானதா அல்லது அதனை அருகிலுள்ள பட்டறைக்கு இழுத்துச்செல்லலாமா என்று முடிவுசெய்யவும்

ஓட்டுவதற்கு முந்தைய பரிசோதனைகள் மற்றும் பெட்ரோல் கடைகளில் குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை பரிசோதனை செய்தல் மற்றும் ரெகுலர் சர்வீஸிங் போன்றவை ஓட்டும்போது பிரச்சனைகள் ஏற்படுவதை குறைப்பதுடன், பராமரிப்புச் செலவையும் குறைக்கிறது.

## » பொருட்களை ஏற்றுதல் மற்றும் கொண்டு செல்லல்

வாகனத்தில் பொருட்களை ஏற்றுதல் என்பது, வாகனங்களின் நிலைப்புத்திறன், கட்டுப்பாடுகள் மற்றும் திறத்துடன் இயங்குதலை பாதிக்கும் ஒரு முக்கியமான காரணி ஆகும். ஒவ்வொரு வாகனமும், ஒரு குறிப்பிட்ட லோட் அளவையும், அதிகபட்ச இருக்கை எண்ணிக்கையையும் கொண்டுள்ளது.




வாகனத்தின் அளவுக்கு மேல் பொருளை ஏற்றினால், வாகனம் சேதாரம் அடைவதுடன், கட்டுப்பாடு இழப்பும் ஏற்படும். இது ஆபத்தான சூழ்நிலைக்கு கொண்டு சென்று, வாகனம் ஓட்டும்போது ஆபத்தான நிலைமை உருவாகும்.

- ► எப்போதும் வாகனத்தில் அளவுக்கு அதிகமான பொருளை ஏற்றாதீர்கள். வரையறுக்கப்பட்ட அளவைத் தாண்டாதீர்கள்(கிகி/ நீளம்/அகலம்/உயரம்).
- ► எடுத்துச் செல்லவேண்டிய ஒவ்வொரு பொருளையும், பாதுகாப்பான இடத்தில் வைக்கவேண்டும். அதை கவனமாக பார்த்துக்கொள்ளவேண்டும்.
- ► உபகரணங்கள், தண்ணீர் பாட்டில்கள், தீ அணைப்பு சாதனங்கள், ஸ்டவ், வாளிகள், இழுப்பு சங்கிலி மற்றும் இன்னபிற உதிரியான பொருட்களை, கேபினில் பாதுகாப்பற்று வைத்திருக்காதீர். ஏனெனில் நீங்கள் திடீரென்று பிரேக் போட்டால், இந்த பொருட்கள் பறந்து, கேபின் முழுவதும் சிதறி, ஆபத்தான ஆயுதங்களாக மாறி உங்களுக்கும், உங்கள் உதவியாளருக்கும் காயங்களை ஏற்படுத்தலாம். இதனால் கட்டுப்பாடும் இழக்கப்படலாம்.

